மேகதாதுவில் அணை :

தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் எதிர்க்கும்!

அமைச்சர் துரைமுருகன் அறிக்கை!

சென்னை, ஜூன் 1–

“கர்நாடக அரசு மேக தாதுவில் அணை கட்டத் திட்டமிடுவதை தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் எதிர்க்கும்” என்று நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கூறியுள்ளார்.

இது குறித்து மேகதாதுவில் அணை கட்டியே தீருவோம் என்றும் அதற்காக 1,000 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும் கர்நாடக மாநில நீர்வளத்துறை அமைச்சர் சிவக்குமார் தெரிவித்ததாக நேற்று காலை பத்திரிக்கையில் வெளியான செய்திக்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் பதில் அறிக்கை வருமாறு:

பெரும் போராட்டத்திற்கு பிறகு வெற்றி பெற்றிருக்கிற சிவக்குமார் அவர்கள் மக்களின் வாழ்த்துகளை பெறுவதில் பரபரப்பாக சுழன்று கொண்டிருப்பதால், கொஞ்சம் நிதானித்து நேரில் வந்து வாழ்த்து கூறலாம் என்று நினைத்திருந்தேன். இருப்பினும் இந்த அறிக்கையின் வாயிலாக முதற்கண் என்னுடைய வாழ்த்துகளை அவருக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

சிவக்குமார் அவர்கள் பதவிப் பிரமானம் எடுத்த சில நாட்களுக்குள்ளாகவே அண்டை மாநிலத்தை உரசிப் பார்க்கிற காரியத்தைச் செய்வது எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. மேகதாது பற்றிய முழு விவரத்தை அதிகாரிகள் இன்னும் அவருக்குச் சொல்லியிருக்க மாட்டார்கள் என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டிற்கு உரிமையுள்ள நீர்பிடிப்புப் பகுதி!

காவிரிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அமைக்கப்பட்ட காவிரி நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்புகளில் மேகதாது பற்றிக் குறிப்பிடப்படவில்லை. மேகதாதுவோ அல்லது அனுமதிக்கப்படாத கட்டுமானங்களோ தமிழ்நாட்டின் நலனைப் பாதிக்கும். எனவே, தமிழ்நாட்டிற்கு உரிமையுள்ள கட்டுப்பாடற்ற நீர்பிடிப்புப் பகுதியில் (un controlled intermediate catchment) மேகதாதுவில் அணை கட்டுவோம் என்று கூறுவது வரவேற்கத்தக்கதல்ல.

கர்நாடக அரசு மேகதாதுவில் அணை கட்டத் திட்டமிடுவதை தமிழ்நாடு அனைத்து நிலைகளிலும் எதிர்க்கும். விரைவில் தங்களை நேரில் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்கு கிடைக்கும். அப்போது இந்தப் பிரச்சினையைப் பற்றி விரிவாக பேசலாம் என்று கருதுகிறேன்.

சிவக்குமார் அவர்கள் அதுவரை பொறுமை காப்பார் என நினைக்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் துரைமுருகன் அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

日本経済新聞 記事利用について

インド・タミルナド州首相「日本企業、インフラ投資を」

2023/5/29 18:35 | 日本経済新聞 電子版

29日、都内で講演するインド南部タミルナド州のスターリン首相

インド南部タミルナド州のスターリン首相は29日、都内で講演し日本企業に対して「製造業だけでなくインフラ整備にも投資範囲を広げてほしい」と述べた。スターリン氏はインフラ整備が進めば「製造業投資の生産性向上にもつながる」と訴えた。2024年に同州チェンナイで開催予定の投資促進イベントへの参加も呼びかけた。

このほど来日したスターリン氏は、日本貿易振興機構（ジェトロ）とタミルナド州政府主催のイベントに登壇した。すでにタミルナド州には日産自動車や東芝などが進出している。同州には港があり、輸出拠点として活用する企業も多い。直近では三菱電機がエアコン工場の設置を進めており、韓国・現代自動車も大型投資を発表している。

スターリン氏は地域政党であるドラビダ進歩同盟（DMK）を率い、21年から州首相を務めている。講演では州として教育分野にも注力しているのを引き合いに「皆さんの会社に最高の人材を提供できる」とも語った。

イベントには首相のほか、州政府高官らも来日して参加した。ジェトロの中山幸英チェンナイ所長は、同州が電気自動車（EV）や米アップルの「iPhone」生産拠点としても期待が高まっている状況などを説明した。（花田亮輔）

本サービスに関する知的財産権その他一切の権利は、日本経済新聞社またはその情報提供者に帰属します。また、本サービスに掲載の記事・写真等の無断複製・転載を禁じます。

– நிக்கி
(ஜப்பானின் முன்னணி பத்திரிகை)

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரான ஸ்டாலின் 2021ல் இருந்து தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருக்கிறார். ஜப்பான் வந்த அவர் டோக்கியோவில் ஜப்பான் நிறுவனத் தலைவர்கள் மத்தியில் பேசினார். அப்போது அவர், தங்களின் தமிழ்நாடு அரசு, கல்விக்கு முக்கியத்துவம் அளிப்பதாகக் குறிப்பிட்டார். அதனால் தமிழ்நாட்டில் தொழில் தொடங்கும் ஜப்பானிய நிறுவனங்களுக்கு திறமையான பணியாளர்களைத் தங்களால் வழங்க முடியும் என்றார்.

விவசாயிகளின் வருவாய் உயர

பாரம்பரியமிக்க வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு!

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கை!

சென்னை, ஜூன் 1-

விவசாயிகளின் வருவாய் உயர விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற அரசு எடுத்து வரும் நடவடிக்கை குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சாகுபடி செலவினைக் குறைத்து, மகசூலை அதிகரித்து, விவசாயிகளின் வருமானம் உயர்வதற்கு, கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை வேளாண் நிதிநிலை அறிக்கையில் அறிவித்து வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது. இந்த வகையில், நமது மாநிலத்தில் பல்வேறு பகுதிகளில் பாரம்பரியமாக சாகுபடி செய்யப்பட்டு வரும் பயிர்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கு அரசு எடுத்துவரும் நடவடிக்கை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

புவிசார் குறியீடு என்றால் என்ன?

குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமே உற்பத்தியாகி, சுவை, மணம், ஊட்டச்சத்து போன்று பல்வேறு வகைகளில் சிறப்புத் தன்மையுடன் விளங்கும் பொருட்களுக்கு புவிசார் குறியீட்டுச் (பதிவு மற்றும் பாதுகாப்பு) சட்டம் 1999ன்படி, புவிசார் குறியீட்டிற்கான விபரங்கள் பதிவு செய்யப்படுகிறது. இதன் மூலம் அந்தந்தப் பகுதிகளில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு சட்டரீதியாக ஒரு பாதுகாப்பு கிடைப்பதுடன் அப்பொருட்களின் மதிப்பு அகில உலக அளவில் உயர்கிறது.

வேளாண் விளைபொருளுக்கு புவிசார் குறியீடு கிடைத்தால் என்ன பயன்?

கம்பம் பன்னீர் திராட்சை, இராமநாதபுரம் குண்டு மிளகாய், மதுரை மல்லிகை போன்ற சிறப்புத் தன்மை வாய்ந்த விளைபொருள்கள் அந்தந்த பகுதிகளில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகிறது. இவ்விளைபொருட்கள் தனிச் சுவை, மணம், குணம், பாரம்பரியமிக்க தரத்துடன் சிறப்பு பெறுகின்றன.

எனவே, இதுபோன்ற வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு கிடைப்பதால், அப்பொருட்களின் தரம் அகில உலக அளவில் பறைசாற்றப்பட்டு, இப்பொருட்களுக்கு சட்டரீதியாக தனி அங்கீகாரம் கிடைக்கிறது. கலப்படமுள்ள பொருட்களை மக்கள் எளிதில் அறிந்து கொள்ள இயலும். இவ்விளைபொருட்களின் உற்பத்தி குறிப்பிட்ட பகுதிகளை மட்டுமே சார்ந்து இருப்பதால், இப்பகுதி விவசாயிகள் இப்பயிர் இரகங்களை அதிகளவில் சாகுபடி செய்ய முன்வருவார்கள். இதனால், உற்பத்தி அதிகரித்து, விற்பனை வாய்ப்புகளும் அதிகரிக்கும். இத்தகைய பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளிடையே ஒரு தன்னம்பிக்கை உருவாகி, அந்தப் பகுதிகளின் ஒட்டுமொத்த பொருளாதாரம் உயர்கிறது.

புவிசார் குறியீடு பெறுவதில் தமிழ்நாடு முன்னணி

வேளாண் விளைபொருள் மட்டுமல்லாது, 55 வகையான பொருட்களுக்கு புவிசார் குறியீட்டுப் பதிவினை மேற்கொண்டு, தமிழ்நாடு அகில இந்திய அளவில் முன்னணி மாநிலமாக திகழ்கிறது. இதில் விருப்பாச்சி மலை வாழை, மதுரை மல்லி, கொடைக்கானல் மலைப் பூண்டு, ஈரோடு மஞ்சள் போன்ற 17 பொருட்கள் வேளாண் விளைபொருட்களாக இருப்பது விவசாயிகளுக்கு ஊக்கம் அளிப்பதாக உள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு மாநில அரசு கடந்த இரண்டு ஆண்டுகளாக பல்வேறு வகையான விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்கு சீரிய முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெற அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள்

வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீட்டின் முக்கியத்துவத்தை உணர்ந்த தமிழ்நாடு அரசு, கடந்த ஆண்டில் பண்ருட்டி பலா, பண்ருட்டி முந்திரி, விருதுநகர் சாத்தூர் சம்பா வத்தல், மதுரை சோழவந்தான் வெற்றிலை, பெரம்பலூர் செட்டிகுளம் சின்ன வெங்காயம், தூயமல்லி அரிசி, புளியங்குடி எலுமிச்சை, சேலம் கண்ணாடி கத்தரி, இராமநாதபுரம் சித்திரைக் கார் அரிசி, கவுந்தப்பாடி அச்சுவெல்லம் போன்ற 10 விளைபொருள்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக, ரூ.30 லட்சம் நிதியை ஒதுக்கியது. வரலாற்றுச் சிறப்பு மிக்க விபரங்களையும், அறிவியல் சார்ந்த தகவல்களையும் சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகளிடமிருந்தும், பல்வேறு நூல்களிலிருந்தும் சேகரித்து, சென்னை கிண்டியில் உள்ள அறிவுசார் சொத்துரிமைப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவரை, சோழவந்தான் வெற்றிலைக்கு மட்டும் புவிசார் குறியீடு பெறப்பட்டுள்ளது. இதர விளைபொருட்களுக்கும் புவிசார் குறியீடு பெற அரசு தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

தொடர்ந்து, நடப்பு 202324 ஆம் ஆண்டில், கிருஷ்ணகிரி அரசம்பட்டி தென்னை, கிருஷ்ணகிரி பன்னீர் ரோஜா, தஞ்சாவூர் பேராவூரணி தென்னை, திருப்பூர் மூலனூர் குட்டை முருங்கை, சாத்தூர் வெள்ளரி, தஞ்சாவூர் வீரமாங்குடி அச்சு வெல்லம், தூத்துக்குடி விளாத்திகுளம் மிளகாய், கடலூர் கோட்டிமுளை கத்தரி, மதுரை செங்கரும்பு, சிவகங்கை கருப்புக் கவுனி அரிசி, ஜவ்வாது மலை சாமை, கரூர் சேங்கல் துவரை, திண்டிவனம் பனிப்பயறு, விருதுநகர் அதலைக்காய், கன்னியாகுமரி ஆண்டார்குளம் கத்தரி போன்ற 15 வகையான வேளாண் விளைபொருட்களுக்கு புவிசார் குறியீடு பெறுவதற்காக அரசு ரூ.45 லட்சம் நிதியினை ஒப்பளித்து, அரசாணை வழங்கி, அதற்கான பணியை துவக்கி உள்ளது.

புவிசார் குறியீட்டிற்கான அரசு அறிவிப்பு வெளியான உடனேயே சம்பந்தப்பட்ட பகுதி விவசாயிகள் அதிக உற்சாகத்துடன், அரசின் நடவடிக்கைகளை பாராட்டியுள்ளதோடு, அதிக பரப்பளவில் சாகுபடி செய்வதற்கும் முக்கியத்துவம் அளித்து வருகிறார்கள். புவிசார் குறியீடு பெற அரசு நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, இம்மாவட்ட விவசாயிகள் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு உள்நாடு மட்டுமல்லாது அகில உலக அளவில் சட்டரீதியாக அங்கீகாரம் கிடைத்து, ஏற்றுமதிக்கான வாய்ப்பு அதிகரித்து, இம்மாவட்ட விவசாயிகளின் வருமானம் கணிசமாக உயரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

இவ்வாறு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

நேற்று (31.5.2023) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சென்னை, கிண்டியில் கட்டப்பட்டு வரும் கலைஞர் நூற்றாண்டு உயர்சிறப்பு மருத்துவமனை கட்டடத்தினை இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால் 15.6.2023 அன்று திறக்கப்படவுள்ளதை தொடர்ந்து, மருத்துவமனைக்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை துரிதமாக முடித்திட துறை சார்ந்த அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். உடன் பொதுப்பணித்துறை சென்னை மண்டல தலைமைப் பொறியாளர் மு. ஆயிரத்தரசு இராஜசேகரன், மருத்துவமனை தனி அலுவலர் டாக்டர் ரமேஷ் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

‘விடுதலை களஞ்சியம்’ முதல் தொகுதி வெளியீடு –

விடுதலை 89 ஆம் ஆண்டு தொடக்க விழா!

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில்!

சென்னை, ஜூன் 1

‘விடுதலை களஞ்சியம்’ முதல் தொகுதி வெளியீட்டு விழா, ‘விடுதலை’ 89 ஆம் ஆண்டு தொடக்க விழா 1.6.2023 -வியாழன் மாலை 6.30 மணியளவில் பெரியார் திடல், நடிகவேள் எம்.ஆர்.ராதா மன்றத்தில் நடைபெறுகிறது.

விழாவில் திராவிடர் கழக துணைப் பொதுச் செயலாளர் ச.பிரின்சு என்னாரெசு பெரியார் வரவேற்கிறார்.

திராவிடர் கழக துணைத் தலைவர் கவிஞர் கலிபூங்குன்றன் அறிமுகவுரையாற்றுகிறார்.

கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்துரை வழங்குகிறார்.

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமை வகிக்கிறார்.

எழுத்தாளர் ப.திருமாவேலன் புத்தக ஆய்வுரையாற்றுகிறார்.

விடுதலை களஞ்சியம் முதல் தொகுதியை கவிஞர் ஈரோடு தமிழன்பன் வெளியிட்டு சிறப்புரையாற்றுகிறார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி. புத்தகத்தை பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

திராவிடர் மகிளர் பாசறை மாநிலச் செயலாளர் பா.மணியம்மை நன்றி கூறுகிறார்.

இந்து சமய அறநிலையத்துறை மானியக் கோரிக்கையின்போது வெளியிடப்பட்ட

அறிவிப்புகளில் 95 சதவீத பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு தகவல்!

சென்னை, ஜூன் 1-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (31.5.2023) ஆணையர் அலுவலகத்தில் 2021 2022 மற்றும் 20222023 ஆகிய நிதியாண்டுகளில் அறிவிக்கப்பட்ட சட்டமன்ற அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்தும், 20232024 ஆம் ஆண்டிற்கான புதிய அறிவிப்புகளை நிறைவேற்றிட மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் சீராய்வுக் கூட்டம் நடைபெற்றது.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கைகளின் போது அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் பணி முன்னேற்றம் குறித்த 23 -வது ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்றது. கடந்த 3 சட்டமன்ற மானியக் கோரிக்கைகளின் போது 526 அறிவிப்புகளின் மூலம் 8,015 பணிகளை மேற்கொள்ள அறிவிப்புகள் வெளியிடப்பட்டன. அதில் 2021 2022 மற்றும் 20222023 ஆகிய ஆண்டுகளில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில் 95 சதவீதம் நிறைவேற்றப் பட்டுள்ளன. 2023 - 2024 ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகளை விரைந்து நிறைவேற்ற அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

1,000 ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணிகள் மேற்கொள்ளும் வகையில் இதுவரை 197 திருக்கோயில்கள் திருப்பணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு கால பூஜை திட்டத்தில் திருக்கோயில்களுக்கு வழங்கப்பட்டு வந்த வைப்பு நிதி ஒரு லட்சம் ரூபாயிலிருந்து 2 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்தாண்டு இத்திட்டத்திற்காக 200 திருக்கோயில்களை தேர்வு செய்வதற்கான பணிகள் விரைவுப்படுத்தப்பட்டுள்ளன. கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர் மக்கள் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில்களின் திருப்பணிக்கு 2,500 திருக்கோயில்களை தேர்வு செய்து வழங்கிட இணை ஆணையர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

திருக்கோயில்களில் நடைபெற்று வரும் அன்னதானத் திட்டம் மற்றும் முழு நேர அன்னதானத் திட்டம் ஆகியவற்றை சிறப்பாக செயல்படுத்திடவும், கடந்தாண்டு திருக்கோயில்களின் சார்பில் 500 இணைகளுக்கு தலா ரூ.50 ஆயிரம் செலவில் திருமணம் நடத்தியதை போன்று இந்தாண்டு 600 இணைகளுக்கு திருமணம் நடத்திட தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டதோடு, இத்திருமணங்களின் தொடக்க நிகழ்வை முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடத்திடவும் முடிவெடுக்கப் பட்டுள்ளது. இராமேசுவரம் - காசி ஆன்மிக பயணத்திற்கு இந்தாண்டு 300 பக்தர்கள் அழைத்து செல்லும் வகையில் பயணத்திட்டம் வகுத்திட அறிவுறுத்தப்பட்டது.

திருக்கோயில்களுக்கு சொந்தமான சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்கும் பணிகள் தொடர்ந்து விரைவுப்படுத்தப்பட்டு வருகின்றன. இது வரை ரூ. 4,505 கோடி மதிப்பீட்டிலான 4,802 ஏக்கர் நிலங்கள் மீட்கப்பட்டுள்ளன. திருக்கோயில் நிலங்களை அளவீடு செய்யும் பணிகளில் இதுவரை 1,16,886 ஏக்கர் நிலங்கள் அளவிடப்பட்டு எல்லை கற்கள் நடப்பட்டு பாதுக்காக்கப்பட்டுள்ளன. திருக்கோயில் களின் குடமுழுக்கை பொறுத்தளவில் இது வரை 709 திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு நடைபெற்றுள்ளன.

இந்து சமய அறநிலையத் துறையின் பணிகளின் முன்னேற்றம் குறித்து 3 கட்டங்களாக 7 மண்டலங்களை இணைத்து ஆய்வுக் கூட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, துறை அலுவலர்களுக்கு குறித்த காலத்தில் உரிய பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. 12 ஆண்டுகளாக பதவி உயர்வு வழங்கப்படாத நிலையில் கடந்தாண்டு 146 அலுவலர்களுக்கு உதவி ஆணையர், துணை ஆணையர், இணை ஆணையர் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது 23 அலுவலர்களுக்கு இணை ஆணையர் நிலையில் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளது. மேலும், அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் அவர்தம் விருப்பத்திற்கேற்போல் பணியிட மாறுதல்களும் வழங்கப்பட்டுள்ளன.

பெரியபாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயிலுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு தேவையான வசதிகளை மேம்படுத்தி வழங்கிடும் வகையில் ரூ.175 கோடி மதிப்பீட்டில் ஒருங்கிணைந்த பெருந்திட்டம் (Master Plan) தயார் செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திருக்கோயிலுக்கு கூடுதலான இடம் தேவை என்பதை கருத்தில்கொண்டு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் மூலம் 5.77 ஏக்கர் நிலம் உரிமை மாற்றம் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் தொட்டதெல்லாம் துலங்கும், கைப்பட்டதெல்லாம் விளங்கும். அந்த வகையில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக அவர் மேற்கொண்ட வெளிநாட்டு பயணம் வெற்றிகரமாக அமைந்து, பல முதலீட்டு ஒப்பந்தங்கள் மூலம் எண்ணற்ற நபர்களுக்கு பணி வாய்ப்பினை வழங்கும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்து கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலர் டாக்டர் க.மணிவாசன்,11இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ.முரளீ தரன், கூடுதல் ஆணையர்கள், திருமதி ந.திருமகள், திருமதி சி. ஹரிப்ரியா, திருமதி மா. கவிதா, இணை ஆணையர்கள், துணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன் , நேற்று (31.05.2023) சென்னை, கிண்டி, சிட்கோ வளாகத்தில் ரூ.100 கோடி மதிப்பில் புதியதாக அறிவிக்கப்பட்ட அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம் குறித்த திட்ட விளக்க கையேட்டினை வெளியிட குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அரசு செயலாளர் வி.அருண் ராய், பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் தொழில் ஆணையர் மற்றும் தொழில் வணிக இயக்குநர் திருமதி சிஜி தாமஸ் வைத்யன், சிட்கோ மேலாண்மை இயக்குநர் திருமதி எஸ். மதுமதி, தொழில் வணிக கூடுதல் ஆணையர் திருமதி கிரேஸ் பச்சோவ், இன்டகோசர்வ் முதன்மை செயல் அலுவலர் திருமதி மோனிகா ராணா, தொழில் வணிக கூடுதல் இயக்குநர் ஏகாம்பரம், ஆகியோர் கலந்துகொண்டனர்.